# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

## ந.க.எண்: 5933/2016/அ5-3/நாள்: 12.02.2018

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்காணும் பணியிடங்களுக்கு தகுதி உள்ள இந்து மதத்தை சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. விண்ணப்பங்களை திருக்கோயில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00மணி வரை திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பக் கட்டணம் ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வ.எண் | பணியிடம் | சம்பள விகிதம் | காலியிடங்கள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1. | இளநிலை மின் பொறியாளர் | P.B.10.<br>8300 - 24900<br>G.P.3600 | 1 | Must possess a Diploma in Electrical Engineering (or) Diploma in Electrical & Electronics Engineering |
| 2. | மின் கம்பியாளர் | P.B.8.<br>4100 - 12300<br>G.P.1900 | 2 | Must possess a Diploma in Electrical Engineering |
| 3. | எலக்ட்ரீஷியன் | P.B.8.<br>4100 - 12300<br>G.P.1900 | 1 | Must possess a Diploma in Electrical Engineering Must be holder of 'C' Certificate issued by the Electricity Board |
| 4. | உதவி மின் கம்பியாளர் | P.B.7.<br>4100 - 10000<br>G.P.1600 | 5 | ITI Certificate in Electrical Trade issued by Government /Government recognized Institution |
| 5. | பிளம்பர் | P.B.8.<br>4100 - 12300<br>G.P.1800 | 3 | ITI certificate in plumber Trade issued by Government/Government recognized Institution |

## நிபந்தனைகள்

1.விண்ணப்பதாரருக்கு 01.07.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும், 35 வயதுக்குட்பட்டு இருக்க வேண்டும்.

2.16.02.2018ஆம் தேதி முதல் 16.03.2018 மாலை 5.45 மணிக்குள் அலுவலகத்திற்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

3.இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

4.தொற்று நோய், உடல் மற்றும் மனநிலை பற்றிய குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

5.நீதி மன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், அரசு பணியில் இருந்தும் பொது ஸ்தாபனத்தில் இருந்தும் இதர திருக்கோயில்களிலிருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

6.நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயர் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்று நகலினைப் பெற்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

7.விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் அந்த பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்றுகள் மற்றும் இதர விவரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

8.விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக விண்ணப்பிக்கும் பணியிடத்தின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

9.வரப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டும் நேர்முக தேர்விற்கு அறிவிப்பு அனுப்பப்படும்.

10.நேர்முக தேர்விற்கு அறிவிப்பு அனுப்பப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

11.தேர்வு செய்யப்படும் நபர்கள் சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்குப் பின்னர் பணி நியமனம் செய்யப்படுவர். சான்றிதழ் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்ட பின்னரே பணி நியமன ஆணை வழங்கப்படும்.

12.பணி நியமனம் இந்து சமய அறநிலைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது.

13.விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

14.விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்து சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருத்தல் வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அசல் சான்றிதழ்களை அனுப்பக்கூடாது.

15.அசல் சான்றிதழ்கள் அனைத்தும் நேர்முக தேர்வுக்கு அழைக்கும்போது எடுத்து வர வேண்டும்.

16.இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,
திருச்செந்தூர் 628 215
தூத்துக்குடி மாவட்டம்.

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்**
**தொழில்நுட்பப் பணியிடங்களுக்கான விண்ணப்பப் படிவம்**

விண்ணப்பிக்கும் பதவி :-

| வ.எண் | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2. | தந்தை /காப்பாளர் பெயர் | |
| 3. | முகவரி (ஆதார் அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 4. | பிறந்த தேதி, வயது (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5. | தற்போதைய முகவரி | |
| 6. | மதம் மற்றும் இனம் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| 7. | கல்வித் தகுதி (சான்று மற்றும் தொழில்நுட்ப கல்வி தகுதி நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 8. | அனுபவம் (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 9. | நன்னடத்தை (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்று இணைக்கப்பட வேண்டும்) | |

மேற்காணும் விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், நான் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றும், இணைக்கப்பட்டுள்ள சான்றுகள் அனைத்தும் உண்மையானவை என்றும் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் ஒப்பம்

**குறிப்பு:**

1. அனைத்து சான்றுகளும் ஜெராக்ஸ் நகல் மட்டுமே இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
2. விண்ணப்பதாரருக்கு 01.07.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் 35 வயதுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.
3. இந்து மதத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.